**செ.வெ. எண்: 716** **நாள்: 02.12.2011**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று **(2.12.2011)** தலைமைச் செயலகத்தில், **2010-2011-** ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (TANSI) அரசுக்கான நியமன கட்டணத் தொகை (Nomination charges) **14** கோடியே **39** லட்சத்து **42** ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் (SIDCO) பங்குத் தொகை **87** லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், தமிழ்நாடு சிறு தேயிலை விவசாயிகளின் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணைய நிறுவனம் (Tamil Nadu Industrial Cooperative Tea Factories Federation Limited) பங்குத் தொகை **15** லட்சத்து **36** ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, என மொத்தம் **15** கோடியே **41** லட்சத்து **78** ஆயிரம் ரூபாய்க்கான வரைவுக் காசோலைகளை மாண்புமிகு ஊரக தொழில் மற்றும் சத்துணவு அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (டான்சி) **2010** – 2011–ஆம் ஆண்டுக்கான **15** % நியமனக் கட்டணத் தொகை **14** கோடியே **39** லட்சத்து **42** ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் (சிட்கோ) **2010** – 2011–ஆம் ஆண்டுக்கான **10** % ஆதாயப் பங்குத் தொகை **87** லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், தமிழ்நாடு சிறு தேயிலை விவசாயிகளின் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணைய நிறுவனத்தின் **2010** – 2011 – ஆம் ஆண்டுக்கான **14** % ஆதாயப் பங்குத் தொகை **15** லட்சத்து **36** ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும், மொத்தம் **15** கோடியே **41** லட்சத்து **78** ஆயிரம் ரூபாய்க்கான வரைவுக் காசோலையை மாண்புமிகு ஊரக தொழில் துறை மற்றும் சத்துணவு அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது தலைமைச் செயலாளர், சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் (பொ.), தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (டான்சி) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் (சிட்கோ) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

நாள்: 2.12.2011